<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP. No.143/2023</u>

PW : 1

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சுதா | க/ பெ. | : | திரு. சரவணன் |
| கிராமம் | : | பனங்குடி | தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | கூலி வேலை | வயது | : | 47 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 30.10.2022 ஆம் தேதிய **முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 30.10.2022 ஆம் தேதியில் நடந்த **எனது மகனின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 15.11.2022 ஆம் தேதியில் **வழங்கப்பட்ட எனது மகனின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 08.02.2019 ஆம் தேதியில் **வழங்கப்பட்ட எனது மகனின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 07.10.2020 ஆம் தேதி வழங்கப்பட்ட **எனது பெயரில் உள்ள வாகனத்திற்கான RC Book உண்மை நகல் ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 30.09.2020 ஆம் தேதியில் **எனது பெயரில் எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்கிய காப்பீடு சான்றிதழ் உண்மை நகல் ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**என் சாட்சியத்தை ஏற்று இம்மனுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.**

**எதிர்மனுதாரர் தோன்ற தரப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளார்.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.30 20:00:13 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்